நாவற்குழியில் 'சுப்பர் சோனிக்' அனர்த்தம்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 27 இதழ் 182
காற்சுவாணம் செவ்வாய்க்கிழமை 11 — 08 — 1992

குடும்பபெண் பலி

[சாவகச்சேரி] குண்டுவீச்சு விமானங்கள் மேற் நாவற்குழி பகுதியில் நேற் கொண்ட திடீர் தாக்குதலில் றுக்காலை இரு சுப்பர் சொனிக் (4-ம் பக்கம் பார்க்க)

குண்டு வீழ்ந்த இடத்தில் 12 அடி ஆழக் குழி

(யாழ்ப்பாணம்) குண்டுகளினால் 12 அடி ஆழ நாவற்குழியில் சுப்பர் மான மூன்று பாரிய குழிகள் சொனிக் விமானங்கள் வீசிய (2ம பக்கம் பார்க்க

7 படை அதிகாரிகள் இறுதிச்சடங்குகள் நடைபெற்றன

(கொழும்பு) கடற்படையைச் சேர்ந்த 7 வடபகுதியில் கணணிவெடிக் உயர் அதிகாரிகளின் இறுதிச் குப் பலியான இராணுவம். (4-ம பக்கம் பார்க்க)

மட்டுநகரில் இராணுவம் கோரத்தாண்டவம்:

பெண்கள், குழந்தைகள் உட்பட 50 தமிழர் வெட்டிப் படுகொலை!

நூற்றுக்கும் அதிகமானோர் படுகாயம்!!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பள்ளமடு கிராமத்தைச் சேர்ந்த புனை என்னுமிடத்தில், ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் நேற்று முன்தினம் 50க்கும் மேற்பட்ட தமிழர்கள் சுடப் பட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களில் பெண்கள், குழந்தைகள் அடங்குவர். 100க்கும் அதிகமா னோர் இச்சம்பவத்தில் படுகாயம் அடைந்தனர்.

நேற்று முன தினம் பிற்பகல் ஸ்ரீலங்கா இராணுவத்தினர், துச் சென்றனர். 2-30 மணியளவில் மட்டக் வெல்லப் புறத்திலுள்ள தமி இராணுவத்தினரால் ஏமாற் களப்பிலுள்ள பள்ளபடு புனை ஸ்ரீர்கள் பலரைக் கதைக்க றப்பட்டு 500க்கும் மேற் கிராமத்தில் பிரவேசித்த வருமாறு தம்முடன் அழைத் (4ம் பக்கம் பார்க்க)

இராணுவத்தளபதி பலாலி விஜயம்!

(கொழும்பு) ரத்ன நேற்று முன்தினம் இராணுவத் தளபதி லெப். பலாலிக்கு விஜயம் செய் ஜெனரல் சில்வா வைத்திய (4-ம் பக்கம் பார்க்க)

வடபகுதிக்கு புதிய கடற்படை தளபதி நியமனம்

(கொழும்பு) பராக்கிரம விஜபரதின நிய வடபிராந்திய கடற்படை மிக்கப்படவுள்ளதாக ராணுவ தளபதியாக கொமடோர (4-ம் பக்கம் பார்க்க)

கொழும்பில் பதற்றநிலை பொலிஸ் தீவிர ரோந்து

(கொழும்பு)

தீவுப்பகுதிக் கண்ணிவெடி யில் கொல்லப்பட்ட இரா ணுவ அதிகாரிகளின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்கு தென்கின் பல இடங்களிலும் இருந்தும் சிங்களவர்கள் கொழும்பு வந்துள்ளதினால், தமிழர்களுக்கு எதிரான கல வரம் கட்டவிழ்த்து விடப் படலாமென்ற அச்ச நிலை நேற்று ஏற்பட்டதாக அங்கு இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அச்ச நிலையைத் தொடர்ந்து கொழும்பில் தமி ழர்கள் வாழும் பகுதிகளில் கூடுதலான பொலிஸார் சேவைக்கு அமர்த்தப்பட்டிருந் தனர். அத்துடன் பொலிஸா ரின் ரோந்தும் அதிகரிக்கப் பட்டிருந்தது.

(4-ம் பக்கம் பார்க்க]

'பிரேமா' இறுதிச்சடங்கில் கலந்துகொள்ளவில்லை

(கொழும்பு கடுவவின் இறுதிச்சடங்கில் கனத்தையில் நடைபெற்ற ஜனதிபதி பிரேமதாசாகலந்து ராணுவ அதிகாரிகளின் இறு கொள்வாரென எதிர்பார்க்கப் திச்சடங்கில். முக்கியமாக பட்டபோதும் அவர் கலந்து ஜெனரல் டென்சில் கொப்பே (3ம் பக்கம் பார்க்க)

தமிழீழ காவல்துறையிடம் இணக்கமன்று விசாரணைகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ இணக்கமன்றுகள், ஆரம்ப நீதிமன்றுகள் யாவும் கலைக்கப்பட்டதைத் தொட ர்ந்து அம்மன்றுகளினால் விசாரணைசெய்யப்பட்டு வந்த பிணக்குகள் யாவும் தமிழீழ காவல் துறையினரிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ளன. இவ் (4ம் பக்கம் பார்க்க)

வெள்ளவத்தையில் தமிழரின் சலூன் மீது தாக்குதல்

(கொழும்பு)

வெள்ளவத்தைப் பகுதியி லுள்ள தமிழருக்குச் சொந்த மான சலூன் ஒன்றின் மீது நேற்று பெற்ரேல் குண்டு வீச்சு தாக்குதல் நடத்தப்பட் டது.

இக்குண்டுத் தாக்குதலினால் எவரும் காயமடையா நபோதிலும் இந்த குண்டு வெடிப்புச்சத்தம் கேட்டு (3ம் பக்கம் பார்க்க)

★ கொப்பேகடுவ இறுதி ஊர்வலத்தில் அமைச்சர்கள் மீது கல் வீச்சு!

ஆவேசம் கொண்ட மக்கள்

ராஜாங்க அமைச்சர் ரணசிங்க காயம்!!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா இராணுவதின் வடபிராந்தியத் தளபதி டென்சில் கொப்பேகடுவவின் இறுதிச் சடங்குகள் நேற்று நடைபெற்றபோது மக்கள் கட்டுப்பாட்டையும் மீறி சோபாவேசங் கொண்டனர். அரசின் மீதுகட்டுக்கடங்காது ஆத் திரமடைந்தனர். இதனால் கற்களைக் கொண்டு இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ளவந்த அமைச்சர்கள் மீது தாக்கத் தொடங்கினர். இத் தாக்குதல் சம்பவத்தில் தகவல்துறை இராஜாங்க அமைச்சர் திரு. ஏ. ரணசிங்கா காயமடைந்தார்.

அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பிய பொதுமக்களுடன் சேர்ந்து பௌத்தபிகுமா ரும் அமைச்சர்கள் மீது கற்களை வீசினர்.

இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்ள பெருந் தொகையான மக்கள் வந்திருந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

நூல் கண்காட்சியும் விற்பனையும்

ஈழத்து நூல் கண்காட்சியும் விற்பனையும் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சகலவித மான இந்திய, இலங்கை தமிழ், ஆங்கில, சமய, விஞ் ஞான கலை இலக்கிய, சோதிட நூல்களுமதெரிவு செய்யுங்கள். ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல் லூர் கந்தசுவாமி கோவி முன்பாக பருத்தித்துறைவீதி, நல்லூர். (எ2335)

வல்லாரைக் குளிசை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU-KOLA Capsules. கிடைக்கு மிடம் எஸ், ரி. மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பா ணம். (சி-6553)

விற்பனைக்கு

தாவடி – மானிப்பாய் வீதி யில் பெரிய வீடு நாலரைப் பரப்பில் விற்பனைக்கு உண்டு. வாங்குபவர் நேரில் வரவும். பாலசிங்கம், இல. 01, செம் மணிவீதி, நல்லூர், முத்திரைச் சந்தை. (சாமுவேல் தொழிற் சாலையிலிருந்து இரண்டாவது வீடு (சி-6649)

வீடியோ கமராவுக்குரிய ஸ்ராண்டுகள் இரண்டு லென் சுகவ் நான்கு, Rechargable Batteries இரண்டு, நஷனல் ரெஸ் றேடியோக்கள் Rs. 3000/- இற்குட்பட்டவை. Casio Data Bank R. G. Rs. 675/-, சீக்கோ ஒட்டோ மற்றிக் கடிகாரங்கள் இரு பாலாருக்குமுரியது. பெறுமதி Rs. 3000/- ஏறத்தாழ Rs. 1750/-க்கு பெற்றுக் கொள்ளலாம். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (சி 6656)

வாங்கலாம் / விற்கலாம்

பாவித்த தரமான கடிகா ரங்கள், மேசைமணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங் களுக்காக வாங்கப்படும். உங் கள் மணிக்கூடுகள் றேடியோக் கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும். சகல மணிக்கூடுகளது பற்றறி களும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம் சகலமணிக்கூடு களும், றேடியோக்களும் உத் தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம். டிலிகா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-6644)

கால்நடை வைத்திய சேவை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம் பாட்டுக் கழகத்தின் அனு சரணையுடன் நடத்தப்பட்ட காலிநடை வைத்திய பயிற்சி வகுப்பில் பயிற்சியினை முடித் துக்கொண்ட பயிற்சியாளர் கள் தற்போது காலிநடை வைத்திய சேவையினை முடித் துத்கொண்டு வருகிறார்கள்.

பயிற்சியினை முடித்துக் கொண்ட பயிற்சியாளர் களால் 7,485 மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய்க்கு எச். எஸ். மருந் தும், 7 546 மாடுகளுக்கு கால்வாய் நோய்க்கு எவ். எம். டி. மருந்தும், 465 கோழிகளுக்கு வெள்ளைக் கழிச்சல் நோய்க்கு றனிக்கட் மருந்தும் ஏற்றப்பட்டுள்ளன.

இலவச வகுப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள பண்டிவிரிச்சான் பிரதேசத் தில் வறிய, இடம்பெயர்ந்த மாணவர்களின் முன்னேற் றம் கருதி விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பால் ஆசிரி யர் தர்மராஜா தலைமையில் மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் முகமாக இல வச வகுப்புக்கள் நடைபெற்று வருகிறது. (அ)

'ஏசியா வீக்' நிருபர் சி. ஐ.டியினரால் விசாரணை

(கொழும்பு)

'ஏசியா வீக்' சஞ்சிகையில் வெளியான ஓர் கார்ட்டூன் தொடர்பாக அதன் தெற்கா சிய நிருபர் திரு ஜோன் கோல்மே கொழும்பில் சி ஐ டி. பொலிஸாரால் கைதுசெய் யப்பட்டு கடும் விசாரணைக் குட்படுத்தப்பட்டு பின் விடு தலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த கார்ட்டூனில் ஜனதி பதி புலியை வாகனமாக பாவிப்பது போன்றிருந்ததாக கூறப்படுகிறது. 'ஏசியா வீக்' பிரசுரங்களும் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

தாம் கடுமையாக விசாரிக் கப்பட்டது குறித்து ஏசியா வீக் நிருபர் ஜோன் கோல்மே திரு பீரட்மன் வீரக்கோனு க்கு புகார் செய்துள்ளார். திரு. கோல்மே உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறி விட்டதாகவும் தெரியவரு கிறது. (சி)

மன்னார் மாவட்டத்தில் தொற்றுநோய் அதிகரிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தொற்று நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது எனத்தெரி விக்கப்படுகிறது.

இங்குள்ள மக்களுக்கு போது மான வைத்திய வசதிகள் இல்லையென்றும் பலர்மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டுள்ள தாகவும், சுமார் 24 பேர் அள வில் வைதியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அறியவருகின்றது.

இங்குள்ள வைத்தியசாலை களில் மருந்து வசதிகள் போதியளவு இல்லையென்றும் கூறப்படுகிறது. (சு-சி)

சனசமூக நிலைய சமாச விளையாட்டுப் போட்டி

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை சன சமூக நிலையங்களின் சமாசம் நடாத்தும் சனசமூக நிலையங் களுக்கிடையேயான விளை யாட்டுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 15ம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

எறிபந்தாட்டம், கரபந் தாட்டம், வலைபந்தாட்டம் தாச்சி, எல்லே ஆகிய விளை யாட்டுக்கள் இப்போட்டிகளில் இடம்பெறும்.

இப்போட்டிகள் பற்றிய மேலதிக விபரங்கள்பெறவிரும் பும் நிலையத்தினர் யாழ். நாவலர் வீதியில் உள்ள யாழ். நாவலர் கலாசார மண்டபத் தில் உள்ள சமாசப் பணிமனை யை நேரில் தொடர்புகொள் ளும்படி சமாச விளையாட்டுக் குழுத்தலைவர் திரு. எஸ். ரி. கணநாதன்தெரிவித்துள்ளார். (154)

கரவெட்டி விக்னேஸ்வரா சாதனை

(யாழ்ப்பாணம்)

1991-ம் ஆண்டில் நடை பெற்ற க. பொ. த. (உ/த) பரீட்சையில் கரவெட்டி விக்னேஸ்வரரக் கல்லூரியிலி ருந்து பரீட்சைக்குத் தோற் றிய மாணவர்களில் 21 பேர் பல்கலைக்கழகத்திற்கு தெரி வாகியுள்ளனர்.

இவர்களில் நால்வர் பொறி யியல்துறைக்கும் இருவர் மருத்துவத் துறைக்கும், ஏழு பேர் பௌதிக விஞ்ஞானத் துறைக்கும் இருவர் மூலமைத் துவத்துக்கும் ஆறுபேர் கலைத் துறைக்கும தெரிவு செய்யப் பட்டுள்ளனர். (ரி)

இராசி பலன்

11-08-1992
செவ்வாய்க்கிழமை
(தமிழுக்கு ஆடி 27)

திரயோதசி ந. ப. 12-13 வரை உத்தராட்டம் முழுவ தும் சித்தயோகம் இராகு காலம் மாலை 3-04 முதல் 4-34 வரை சுபநேரம் காலை 10-34 முதல் 2-04 வரை.

மேடம்: கல்விஞானம், நல் லோர் சேர்க்கை, சுகபோகம்.

இடபம்: வஞ்சகர் செயல், வியாபார நஷ்டம், அலைச் சல்.

மிதுனம்: மந்தபுத்தி, மனச் சோகம், பயணத்தடை.

கடகம்: பெருந்தனம், புகழ் ஒரு உபதேச .

சிங்கம்: குடும்பசுகம், மன நிறைவு சத்துரு வெற்றி.

கன்னி: உஷ்ண வியாதி, மனமயற்றம், ஆவேசம்.

துலாம்: ஆடம்பரச்செலவு இனசன வருகை, தியாகம்.

விருச்சிகம்: காரிய ஜெயம் ஆத்மீக சிந்தனை, தானதாமம்

தனுசு: இறைவழி செலவு சுற்றத்தவர் உதவி, மரி யாதை.

மகரம்! மனத்துயர், வியா பாரப்போட்டி, விவாதம்

கும்பம்: குடும்பப் பிரிவு, கருத்துவேற்றுமை, அகால போசனம்.

மீனம்: காரிய சாதனை, வெகுஜன பாராட்டு, தைரிய மிகுதி.

— ஜோஸ்யர்

நினைவஞ்சலிக் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

ஈழ விடுதலைப் போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை 8ம் மாதத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களை நினைவு கூரும் அஞ்சலிக் கூட்டங்கள் வலிகாமக்கோட்ட வட்டாரீதி யாகநடைபெற்றுவருகின்றன. இதில் விடுதலைப் புலிகள் உறுப் பினர்கள் கலந்துகொண்டு அஞ்சலியுரையாற்றுகின்ற னர்

14ம் திகதி கோப்பாய் வட் டம் கோப்பாய் கிறிஸ்தவ கல் லூரி, 19ம் திகதி சங்கானை வட்டம், கிளம்புப் புளியடி வைரவர் கோவில், 23ம் திகதி யாழ்ப்பாண வட்டம் திருக் குடும்பக்கன்னியர்மடம், பாட சாலை, 29ம் திகதி தெல்லிப ளை உடுவில் வட்டம், ஏழாலை முத்தமிழ் மன்றம், கூட்டங் கள் இரவு 7-30மணிக்கு நடை பெறும். (சி)

இலவச வைத்திய சேவை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் லயன்ஸ் கழக வசதி குறைந்தவர்களுக்கான இலவச வைத்தியசேவையின் ஒரு பகுதியாக இம்மாதம் 23 ம் திகதி ஞாயிறுகாலை வைத்திய கலாநிதி க. சிவ நேசன் இலவச ஆலோசனை பரிசோதனை சிகிச்சை நடாத் துவார் விபரங்களைப் பெற விரும்புவோர் 20 ம் திகதிக்கு முன் தங்கள் பெயர்களை லயன்ஸ் கழக காரியாலயம், 374, பருத்தித்துறை வீதி, நல்லூர் என்னும் விலாசத்தில் காலை 9 மணி முதல் 12 மணி வரை பதிவு செய்யும்படி கோரப்படுகிறது. (அ)

'கூவு குயிலே' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நிதர்சனத்தின் 9-வது வெளியீடான 'கூவுகுயிலே' இசை நாடா வீடுதலைப் புலி களின் மூத்த உறுப்பினரான திரு. இளங்குமரனால் வெளி யிடப்பட்டது.

நிதர்சனத்தின் பொறுப் பாளர் திரு. பரதனின் தலை மையில் இவ்விழா நடைபெற் றது.

மதிப்பீட்டு உரையை திரு. யோகரட்ணம் யோகியும், திரு. புதுவை இரத்தினதுரை யும் நிகழ்த்தினர்கள்.

மேற்படி இசை நாடாவில் பாடிய கலைஞர்களுக்கு திரு. இளங்குமரன் பரிசில்களை வழங்கினர். (வி)

வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

வலலாய்ப பகுதியல் நேற்று முனதினம் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடை யில் இடம்பெற்ற மோதலில் புலிகள் தரப்பில் வட்டுக் கோட்டை சித்தன்கேணி யைச் சேர்ந்த லெப்டினன்ட் ஆனந்தகுமார் அல்லது சார்ள்ஸ் என்றழைக்கப்படும் பாலசுப் பிரமணியம் தெய்வேந்திரம் என்றபோராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

மட்டக்களப்பு, மூதூர் கவி யால்சேனை என்னுமிடத்தில் கடந்த 7-ம் திகதி 10.30 மணி யளவில் ஸ்ரீலங்கா இராணுவத் தினருக்கு எதிரான தாக்குதல் சம்பவம் ஒன்றில் புலிகளின் ஆதரவாளரான 35 வயதான ஈச்சிலம்பத்தை பூநகரி மட் டக்களப்பைச் சேர்ந்த புண்ணி யம் பாலசிங்கம் என்பவர் வீரச்சாவைத் தழுவிக்கொண் டார். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமதுவீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (சு-அ)

நல்லூர் தெய்வீக இசை அரங்கு

இன்றைய இசை நிகழ்ச்சி

பாட்டு;
பொன். ஸ்ரீவாமதேவன்
வயலின்:
ஆர். எஸ். கேசவமூர்த்தி
மிருதங்கம்:
எஸ். துரைராஜா

இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்ட லீக் அரியாலையில் நடாத்தும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியில் இன்றைய முத லாட்டத்தில் பாடும்மீன் கழ கமும் அரியாலை ஐ. கழகமும் மோதுகின்றன.

2-வது 40 வயதுப் போட்டி யில் செண். நீக்கிலஸ் கழக மும் வைக்கிங்ஸ் கழகமும் மோதுகின்றன. (வி)

குண்டு வீழ்ந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டுள்ளன.

6 அடிகளும் அதிகமான நீள முடைய குண்டுகளே இப்பகு தியில் வீசப்பட்டுள்ளன. இக குண்டு வீச்சால் ஏற்பட்ட 12 அடி ஆழக்குழியின் விட்டம் 8 அடிக்கும் அதிகமாகும்

இப்பகுதியில் வெடிக்காத நிலையில் புலிகளால் கைப்பற் றப்பட்ட சுப்பர் சொனிக் குண்டு பொதுமக்களின் பார் வைக்காக குடாநாட்டின் பல பகுதிகளில் நேற்று வைக்கப் பட்டது. (155-56-சி-ரி)

பார்சிலோனை ஒலிம்பிக்கில் முன்னணி வகிக்கும் நாடுகள்

நாடு	தங்கம்	வெள்ளி	வெண்கலம்
இணைந்த சோவியத்	45	38	29
ஐக்கிய அமெரிக்கா	37	34	37
ஜெர்மனி	36	20	26
சீனா	26	22	16
கியூபா	14	10	7
ஸ்பெயின்	13	1	10
தென்கொரியா	10	3	13
நோர்வே	2	3	—
துருக்கி	2	1	1
செக்கோசிலவாக்கியா	2	2	1
போலந்து	3	4	6
ஜப்பான்	3	7	7
ஹங்கேரி	10	7	2
பிரிட்டன்	4	3	5
இத்தாலி	4	5	8
ரூமேனியா	4	4	6
கனடா	6	1	6
அவுஸ்திரேலியா	6	8	9
பிரான்ஸ்	7	5	13

இதேவேளை சில பதங்கங்களில் தென்னிலங்கை நடிகர்களினதும், ரஜனிகாந்தின் படங்களும் உள்ளன வாம்.

சகல பாண் உற்பத்தியாளர்களுக்கும் கலந்துரையாடல்

இடம்: விடுதலைப்புலிகள் அரசியல்துறை மாவட்டச் செயலகம், கோண்டாவில்.

காலம்: 12-08-1992 புதன்கிழமை காலை 10மணி

விடயம்: பாண் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள்.

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள் இதுவரை சங்கத்தில் பதிவு செய்யப்படாமல் இயங்கும் பேக்கரி உரிமையாளர் கள் சகலரையும் தவறாது சமுகம் தரும்படி கேட்கப் படுகின்றனர்.

த. சிவசுப்பிரமணியம்,
தலைவர்,
பேக்கரி உரிமையாளர் சங்கம்,
யாழ். மாவட்டம்.

(சி-6661)

செய்திச்சுருக்கம்

விளையாட்டுப் போட்டி

(நெல்லியடி)

வடமராட்சி தென்மேற்குப் பிரதேச சபைப் பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி, கடந்த வெள்ளிக்கிழமையன்று கரவெட்டி திருஇருதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக வடமராட்சி தென்மேற்குப் பிரதேச சபை நிர்வாக உத்தியோகத்தர் திரு. எஸ். செவ்வந்திநாதர், சிறப்பு விருந்தினர்களாகக் கரவெட்டி பங்குத் தந்தை அருட்திரு. ரோ. மே. கொ நேசநாயகம், கரவெட்டி வடக்கு கிராமசேவை அலுவலர் திரு. எம். வேலாபரணம், கரவெட்டி திரு இருதயக் கல்லூரி அதிபர் பி மனோகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (160-அ)

பொதுசன உதவிப் பணம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய்ப் பிரதேசச் செயலர் பிரிவில் மாதாந்தப் பொதுசன உதவிப் பணம் பெறுபவர்களுக்கு, கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான மாதாந்த உதவிப் பணம் விரைவில் வழங்கப்படவுள்ளது. சண்டிலிப்பாய், ஆனைக்கோட்டை தபாலகப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு குறிப்பிட்ட தபாலகங்கள் மூலம் இப்பணம் வழங்கப்படும். (72-அ)

வருடாந்த உற்சவம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு காலையடி ஞானவேலாயுத சுவாமி கோவில் வருடாந்த உற்சவம் கடந்த 2ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் இவ்வுற்சவத்தில் தினமும் கந்தபுராணப் படிப்பு இடம்பெற்று வருகின்றது. (72-அ)

வெள்ளவத்தையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளவத்தையிலுள்ள தமிழர்கள் மத்தியில் பதற்றம் நிலவியது.

தாம் எந்நேரமும் தாக்கப்படலாமென்ற அச்சத்துடன் இப்பகுதியிலுள்ள தமிழர்கள் பீதியுடன் நேற்றைய பொழுதைக் கழித்தனர்.

இதேவேளை கண்டி, மாத்தளை, நீர்கொழும்புப் பகுதிகளிலுள்ள தமிழர்களும் பீதியுடன் நேற்றுக் காணப்பட்டனர்.

தீவுப்பகுதியில் பலியானபடையினரின் இறுதிச்சடங்குகள் இப்பகுதிகளிலும் நேற்று இடம்பெற்றது. இதனால் இங்குள்ள தமிழர்களின் கடைகள்யாவும் மூடப்பட்டிருந்ததுடன், தமிழரின் நடமாட்டமும் குறைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ரி-கே)

பிரேமா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை இறுதிச்சடங்கு நடைபெற்றவேளை அங்கு கூடி நின்ற கும்பல்கூச்சல் குழப்பம் செய்ததால் அங்கு சமுகமளித்த மூத்த அமைச்சர்கள் இறுதிச்சடங்கிலிருந்து அவசர அவசரமாக வெளியேற வேண்டி நேரிட்டது.

ஜெனரல் கொப்பேகடுவவின் தகனக்கிரியை முடிந்ததும் மயானத்தினுள் நின்ற பலர் அரசுக்கு எதிரான சுலோகங்களை எழுப்பி கூச்சலிட்டனர்.

இந்த கூச்சல் குழப்பம் ஏற்படுத்தியவர்களை கலைக்க பொலிசார் வானை நோக்கிச் சுட்டனர். கலகத்தை அடக்கும் பொலிசாரும் அங்கு வரவழைக்கப்பட்டனர். [கே]

ஆங்கில சங்கம்

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப்பிரிவில் பண்டத்தரிப்பு ஆங்கில சங்கம்'' ஒன்று அண்மையில் அங்கு ரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் முடிவிற்குள் ஆங்கில தினவிழாவொன்றைக் கோட்டமட்டத்தில் நடத்துவதென்றும் கோட்ட ஆங்கில செய்தி ஏடு ஒன்று வெளியிடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. ஆங்கில சங்கத்தின் செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (139-அ]

பிரதேசசபை செயலர் நியமனம்

[பருத்தித்துறை]

வடமராட்சிப் பகுதியில் உள்ள இரண்டு உள்ளூராட்சி மன்ற பிரதேச சபைகளுக்கும் இரு புதிய செயலாளர்களை வடக்கு கிழக்கு மாகாண சபை உள்ளூராட்சித்திணைக்களம் நியமித்துள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளராக திரு சட்டநாதர் செவ்வந்திநாதரும், கரவெட்டி பிரதேச சபைக்கு திரு. எஸ் இராமலிங்கமும் கடந்த 1-ம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளனர். [52-ரி)

★ அம்பாறையில் பல தமிழ்கிராமங்கள் அழிப்பு; 5 பாடசாலைகள் தகர்ப்பு

(அம்பாறை)

அம்பாறையில் தமிழ்க்கிராமங்கள் பல அழிக்கப்பட்டு வருகின்றன எனத்தெரிவிக்கப்படுகின்றது.

இதன்பிரகாரம் மல்வத்தை பலத்தாப்பிட்டி, மல்லிகைத்தீவு, கணபதிபுரம், வீரச்சோலை தமிழர்கள் அகதிகளாக தங்கியுள்ள வேளையில் அக்கிராமங்களில் உள்ள வீடுகள் யாவும் சூறையாடப்பட்டுள்ளன மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. அக்கிராமங்கள் பாலைவனம் போன்று காட்சியளிக்கின்றன.

இக்கிராமங்களில் உள்ள ஐந்து பாடசாலைகளும் இடித்துத் தள்ளப்பட்டுள்ளது. மேற்படி கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்த தமிழ்மக்கள் காரைதீவு திருக்கோவில், கல்முனை ஆகிய இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டுவருட காலமாக எதுவித உதவியுமின்றி இக்கிராம மக்கள் வறுமையால் வாடுகிறார்கள் என்றும் கல்வி வசதிகளும் செய்துகொடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. [சு-சி]

4வது தேசிய ஜம்போறி

(திருநெல்வேலி)

4 வது தேசிய ஜம்போறி எதிர்வரும் 15ம் தேதி முதல் 26ம் தேதி வரை குருணாகலையில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளது,

இத்தேசிய ஜம்போறியில் பல உலகநாடுகளின் சாரணர்களும் யாழ். மாவட்ட சாரணர்களும்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (157-சு-அ)

இராணுவ பங்கர்களில் விநாயகக் கடவுள்

(கொழும்பு)

பலாலி இராணுவ முகாம் பகுதியில் இராணுவத்தினர் பதுங்கியுள்ள அனைத்து பதுங்கு குழிகளிலும் இந்துக்கடவுள்களின், குறிப்பாக விநாயக கடவுளின் படங்கள் வைக்கப்பட்டுள்ளதாக 'இந்தியா ருடே' நிருபர் நேரில் பார்த்து எழுதியுள்ளார்.

புலிகளின் கடுமையான தாக்குதலையும், பீரங்கி, ஷெல் தாக்குதல் மற்றும் ஓயாத போரினால் தமது மனநிலை பாதிப்படைந்துவிடும் என்ற அச்சத்திலேயே படையினர் பதுங்குகுழிகளில் விநாயகர் வழிபாட்டை நடத்துகிறார்களாம். (சி)

வயோதிபருக்கு நாய் கடித்தது

(அரியாலை)

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த முருகேசு கணபதி (வயது 74) நாய் கடிக்கு இலக்காகி கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரியில் மயங்கியநிலையில் அனுமதிக்கப்பட்டு பின் அம்புலன்ஸ் வண்டிமூலம் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (59-அ]

அகதிகள் தங்கியிருந்த கொட்டில்கள் தீக்கிரை

[வவுனியா]

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய அகதிகள் தங்கியிருந்த கொட்டில்கள் கடந்த 7ம் திகதி தீக்கிரையாகின

வவுனியா தாண்டிக்குளத்தில் அமைக்கப்பட்டிருந்த இந்த அகதி முகாமில் குழந்தைகள் பெண்கள் உட்பட 200 அகதிகள் தங்கியிருந்தனர்.

இந்த கொட்டில்கள் எவ்வாறு தீக்கிரையாகின என்பதுகுறித்து மர்மமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ரி]

96ம் ஆண்டு 26வது ஒலிம்பிக் அமெரிக்காவில் நடைபெறும்

(பார்ஸிலோனா)

26வது ஒலிம்பிக் போட்டி 1996ம் ஆண்டு அமெரிக்காவில் அட்லான்டாவில் நடைபெறுமென சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தலைவர் திரு. யுவான் அன்ரோனிசமரான்ஸ் அறிவித்துள்ளார்.

1996ம் ஆண்டு அமெரிக்காவின் அட்லான்டாவில் கூடுமாறும் உலக இளைஞர்களுக்கு திரு. சமரான்ஸ் அழைப்பு விடுத்துள்ளார்

25வது ஒலிம்பிக் நேற்று முன்தினம் பார்ஸிலோனாவில், உள்ளம் கவரும் இசை, உணர்ச்சிபூர்வமான நடனம், உற்சாகமான வேடிக்கையுடன் நிறைவுற்றது. (சி)

ஆறுமாத காலத்தில் 507 படையினர் பலி

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஜனவரி முதல் ஜூன் மாதங்களுக்கிடையில் 507 படையினர் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே காலப்பகுதியில் ஆயிரக்கணக்கான படையினர் காயமடைந்தனரென்றும் இதில் 500 பேர் படுகாயமடைந்து அங்கவீனமான நிலையிலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இ-ரி)

சைக்கிள் திருட்டு

(அரியாலை)

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள அ. தங்கராசா என்பவரின் ஏசியா சைக்கிள் திருடப்பட்டுள்ளது. இவர் யாழ். சின்னக்கடை மீன்சந்தைக்கு வெளியில் சைக்கிளை நிறுத்திவிட்டு சந்தைக்குள் சென்றபோதே இத்திருட்டு நடந்துள்ளது. (59-அ)

தடகள விளையாட்டு

[யாழ்ப்பாணம்]

மாவீரர் தடகள விளையாட்டு விழாவை (தியாகி திலீபன் நினைவுக் கேடயத்திற்கானது) ஒட்டிய ஆண்கள் பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி, சைக்கிள் ஓட்டப் போட்டி, வேகநடைப் போட்டி ஆகியன முறையே ஆகஸ்ட் 30, 31 செப்டம்பர் 2 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது

இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி ஆகஸ்ட் 15-ம் திகதி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பப் படிவங்களை அவ்வப பகுதி வட்டப் பிரதேசப் பொறுப்பாளர்களிடம் பெற்றுகொள்ளலாம். (வி-அ)

முகாமையாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்]

'இலங்கை வங்கி தலைமையகம் வடபகுதி வங்கித் தேவைகளை நிறைவு செய்வதில் பின்னடிப்பு' என்ற தலைப்பில் 6ம் திகதி வெளிவந்த செய்தி பற்றி இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர் திரு. கே. கணேசமூர்த்தி தான் கீழ்கண்டவாறுதான் அக்கூட்டத்தில் பேசியதாக தெரிவித்துள்ளார்.

''தற்போதைய எமது பிரதேசத்தின் யுத்தநிலைமை காரணமாக அரசாங்கம் கூட்டுப்படை தலைமையத்தினூடாக அமுல்படுத்தியுள்ள சில விதிமுறைகளினால் எமது தலைமையகம் எமது வங்கிக்கிளைகளுக்கு உரிய நேரத்தில் வேண்டிய தேவைகளை செய்ய முடியாமல் இருக்கின்றது.'' (சி)

மரங்கள் நட ஏற்பாடு

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மரக்கன்றுகளை கூடுதலாக நாட்டுவதற்குரிய நடவடிக்கைகளை கிராம உத்தியோகத்தர்கள் மேற்கொண்டுள்ளனர். (137-அ]

நாடு பிளவுபடுவதை அரசு அனுமதிக்காது : ஜனாதிபதி

(மொரட்டுவ)

நாட்டிற்குள் தனிநாடு ஒன்று அமைக்க அரசு ஒரு போதும் இடமளிக்காது'' என்றுஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

மொரட்டுவையில் நடைபெற்ற, தீவுப்பகுதியில் கொல்லப்பட்ட படை அதிகாரிகளின் அஞ்சலிக் கூட்டத்திலே அவர் இவ்வாறு கூறினார்.

சுமார் பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் ஜனாதிபதி ஆழ்ந்த துயரத்தோடும் கவலையோடும் இந்த அஞ்சலி உரையை நிகழ்த்தினார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது: பொதுவான புரிந்துணர்வின் அடிப்படையில் இனப் பிரச்னைக்கு தீர்வுகாணப்படும். அநீதிகளுக்கு நான் ஒரு போதும் தலைவணங்கமாட்டேன்.

காலம்சென்ற பத்துப்படையினரும் நாட்டுக்கு ஆற்றிய அரும்பணிக்காக அவர்களை பாராட்டுகிறேன் என்றார் (ரி-சி)

சுகாதார சிற்றூழியர் கொடுப்பனவு அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

சுகாதார திணைக்களப் பகுதியில் கடமை புரியும் சிற்றூழியர்களுக்கு மேலதிகக் கொடுப்பனவு 425 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதத்திலிருந்து 135 ரூபாவிலிருந்து 425 ரூபா 12 மணித்தியாலம் கடமை புரியும் சிற்றூழியர் மேலதிகப் படியினைப் பெறத் தகுதியுள்ளவராவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2-5 தொடக்கம் 10 மணி நேரம் கடமை புரியும் சிற்றூழியர்களுக்கும் மேலதிகப்படி கொடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (56-ரி)

வாயாரப் பாட்டிசைப்போம்!

நல்லூர் முருகன்தன் நாமத்தை எந்நாளும்
எல்லோரும் சொன்னால் இடர்தீரும் — வல்லோராய்
வாழ்வோமே வாருங்கள் வாயாரப் பாட்டிசைத்து
சூழ்வோம் அவன்தாள் துணை!

— அமுதன்

[இன்று நல்லூர் கந்தசுவாமி கோவில் 9-ம் திருவிழா]

முஸ்லிம் கும்பலினால் 33 தமிழர்கள் படுகொலை

(கொழும்பு)

பொலநறுவ மாவட்டத்திலுள்ள வெலிகந்தப் பகுதியில் நேற்று முன்தினம் 33 தமிழர்கள் முஸ்லிம்களால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இக்கிராமத்திற்குள் திடீரென நுழைந்த முஸ்லிம் காடையர்கள் அங்கு வசிக்கும் கிராம வாசிகள் மீது கண்டபடி துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

இத்துப்பாக்கிச் சூட்டினால் பெண்கள், குழந்தைகள், முதியோர்கள் உட்பட 24 பேர் ஸ்தலத்திலே துடிதுடித்துப் பலியானார்கள் என்றும் பின்னர் 9 பேர் பலியானார்கள் எட்டுப்பேர் வரையில்காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல் பழிவாங்கும் நடவடிக்கையாகவே முஸ்லிம் காடையர்களால் திட்டமிட்டு நடத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ரி)

132 இலங்கைதமிழ் அகதிகள் திருமலைக்கு அனுப்பிவைப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழ அகதிகள் 132 பேரை ஏற்றிக்கொண்டு இந்திய எயர் லைன்ஸின் தனி விமானம் நேற்று பிற்பகல் சென்னையிலிருந்து திருகோணமலைக்கு சென்றது.

இந்தியாவில் இருந்து இலங்கை தமிழ் அகதிகளின் இரண்டாவது கட்டப்பயணம் கடந்த ஆகஸ்ட்டில் தொடங்கியது.

இந்த மாதம் 9 தனிவிமானங்களில் இலங்கை அகதிகளை ஏற்றிவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (கே)

அகதிகளை விசாரிக்க ஐ. நா. அதிகாரிக்கு தடை

[சென்னை]

ஐ. நா. அகதிகள் பராமரிப்பு உயர் ஸ்தானிகராலய அதிகாரி ஒருவர் நேற்று சென்னைக்கு வந்து மண்டபம் முகாமில் தங்கியிருக்கும் தமிழ் அகதி மக்களை பார்வையிட சென்றபோது, அவருக்கு அனுமதி வழங்கவில்லையென்று கூறப்படுகிறது.

அகதிமக்கள் வலுக்கட்டாயமாகவா இலங்கைக்கு அனுப்பப்படுகிறார்கள் என்பதனை விசாரிக்க அவருக்கு முன்னர் வாக்குறுதியளிக்கப்பட்டதன் பேரிலேயே சென்னை வந்திருந்தார்.

இதேவேளை மண்டபம் முகாமில் இந்திய அதிகாரிகள் கெடுபிடி அதிகரித்து வருவதாக பல அகதிகள் முறையிட்டுள்ளனர்.

இலங்கை போக விரும்புகிறவர்கள் மட்டும் திருப்பி அனுப்பப்படுவார்கள் தங்க விரும்புவோர்தங்கலாம் என்ற இந்திய அரசின் அறிவித்தலை முகாமில் ஓட்டவிடாது அதிகாரி மிரட்டியுமுள்ளார்.

நாவற்குழியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இளம் குடும்பப்பெண் ஒருவர் உடல் சிதறிப் பலியானார். இவரது கணவன் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர்களது குழந்தை ஒன்று காயமடைந்துள்ளதுடன் கண்ணாடிக் தொழிற்சாலை உட்பட பலவீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்றுக் காலை சுமார் 6–30 மணியளவில் திடீரென வான் பரப்பை ஊடுருவி வந்த இரு சுப்பர் சொனிக் விமானங்கள் நாவற்குழி சந்திக்கு அண்மையில் திடீரென நான்கு இராட்சத குண்டுகளை வீசித் தாக்கின.

குடியிருப்புகளை நோக்கி இக்குண்டுகள் வீசப்பட்டதால் அங்கிருந்து தப்பி ஓடுகையில் நாவற்குழி பிரதான வீதியைச் சேர்ந்த இளம் குடும்பப்பெண்ணான ஈஸ்வரி சின்னத்துரை [28 வயது] அவ்விடத்திலேயே உடல் சிதறிப் பலியானார்.

இவரது கணவன் எஸ். சின்னத்துரை [31 வயது] படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாவற்குழி உணவுக் களஞ்சியத்திற்கு முன்னால் உள்ள குளத்தில் ஒரு குண்டு விழுந்து வெடித்ததில் பிரதான வீதியின் மதகில் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. வீதி பிளந்த நிலையில் தரைஇறங்கியுள்ளது. இதனால் பிரதானவீதி போக்குவரத்துகு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. என். என் ஆர் நவரட்ணம். குணம் அரிசி ஆலையும் சேதமடைந்துள்ளன. இதேவேளை பிரதான வீதிக்கு அண்மையில் வெடிக்காத நிலையில் குண்டு ஒன்று மீட்டெடுக்கப்பட்டது

மற்றொரு குண்டு பனை வளவினுள் விழுந்ததில் பெருந்தொகையான பனை மரங்கள் சேதமடைந்துள்ளன. இக்குண்டு வீச்சால் க. இலங்கையர், எஸ்.பரமானந்தம், எஸ். பற்குணம் ஆகியோரின் வீடுகளும் எஸ்.ஜெயராஜ், இராஜன ஆகியோரின் கடைகளும் சேதமடைந்துளளன. இக்குண்டு வீச்சின்போது நாவற்குழி வீடமைப்புத்திட்ட மக்களும் ஏனையோரும் மதகுகளிலும் பங்கர்களிலும் தஞ்சம் அடைந்தனர். இதனால் பெரும் உயிர் இழப்புக்கள் தவிர்க்கப்பட்டன.

சுப்பர் சோனிக் விமானம் சாவகச்சேரியிலும் நோட்டமிட்டது. இதனால் இப்பகுதி மக்கள் அதிகாலையில் சிலமணி நேரம் பங்கர்களில் தஞ்சம் அடையவேண்டிய நிலைமை ஏற்பட்டது. சந்தையில் பொருட்களை விற்க, வாங்க வந்தவர்கள் பொருட்களை அப்படியே விட்டுவிட்டுச் சிதறி ஓடினர். நாவற்குழிக் குண்டு வீச்சினால் சாவகச்சேரி பெரும் சத்தத்துடன் அதிர்ந்தது. (155–56–சி-ரி)

7 படை அதிகாரிகள்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சடங்குகள் நேற்று நடைபெற்றன

இந்த இறுதிச் சடங்குகளில் பலலாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

காலஞ்சென்ற லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் பூதவுடல், நேற்று மாலை 5-00மணிக்கு கனத்தை மயானத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது. அச்சயம் ஹெலியிலிருந்து மலர்கள் தூவப்பட்டன. (கே)

இராணுவ

[1-ம பக்கத் தொடர்ச்சி]

துள்ளார்.

அராலிச் சந்தி கண்ணிவெடி சம்பவம் தொடர்பாக பூர்வாங்க விசாரணைகளை நடாத்தவே இவர் பலாலிக்கு விஜயம் செய்தார்.

இதுதொடர்பாக விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே. (சி)

"பேச்சுவார்த்தை மூலமே இறுதித்தீர்வு காணலாம்"

(கொழும்பு)

"வடக்கு-கிழக்குபிரச்னைக்கு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் அதேவேளையில் அர்த்தமுள்ள பேச்சுவார்த்தை மூலமே இறுதித் தீர்வு காணமுடியும்"

இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

வடபகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சம்பவத்தில் உயர் தளபதிகள் உயிரிழந்தமை குறித்து முஸ்லிம் காங்கிரஸ் அதிர்ச்சி தெரிவித்துள்ளது. (க)

சேதம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் நேற்று இடம்பெற்ற விமானத் தாக்குதலில் எழுச்சி வலுவிழந்தோர் தொழிலகமும் சேதமடைந்துள்ளது.

இத்தொழிலகம், அறவழிப் போராட்டக் குழுவினால் நடத்தப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (ரி)

மட்டுநகரில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பட்ட தமிழர்கள் அழைத்துச் செல்லப்பட்ட சில நிமிடங்களில் அவர்களைக் கண்மூடித்தனமாக வெட்டியும், சுட்டும் கோரத்தாண்டவம் ஆடினார்கள் இதனால் 50க்கும் மேற்பட்டோர் ஸ்தலத்தில் துடிதுடித்துப் பலியானார்கள்.

இராணுவத்தினரின் வெறியாட்டத்தைத் தொடர்ந்து காயமடைந்தநிலையில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் திசை தெரியாது ஓடத் தொடங்கினார்கள்.

படுகாயங்களுடன் தப்பி ஓடியவர்களின் நிலை பற்றி எதுவும் அறியமுடியாதுள்ளது. (ரி)

கொழும்பில்

(1-ம பக்கத் தொடர்ச்சி)

நகரிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் பொலிஸார் உஷார்படுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ரி-கே)

வடபகுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புலிகளின் கண்ணிவெடியில் கடந்த சனிக்கிழமை உயிரிழந்தவர்களில் வடபிராந்திய கடற்படைதளபதி கொமடோர் மோகான் ஜெயமகாவின் இடத்திற்கே இவர் நியமிக்கப்படவுள்ளார்,

இதேவேளை இவருடன் உயிரிழந்த கடற்படை உயர் அதிகாரிகளின் இழப்பு கடற்படையினருக்கு ஓர் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

கொப்பேகடுவவின்

ம்[1] பக்கத் தொடர்ச்சி]

ஆனால் அத்தனை பேரையும் கனத்தை மயானத்துக்குள் உள்ளடக்க முடியாததால் பாதுகாப்புப் படையினர் அவர்களை மயானத்துக்குள் விடாது தடுத்து நிறுத்தினர். இதனால் மக்கள் ஆத்திரமடைந்தனர்.

வடபகுதியில் கடந்த சனிக்கிழமை பலியான ஒன்பது படை அதிகாரிகளையும் கௌரவிக்கும் முகமாக தேசிய துக்கதினத்தை அரசு பிரகடனம் செய்யத்தவறியது, டென்சில் கொப்பேக்கடுவவின் இறுதிச் சடங்குகளில் மக்கள் அனைவரும் வசதியாகக் கலந்துகொள்ளும் விதமாக இறுதிச்சடங்குகளை கொழும்பு சுதந்திரச் சதுக்கத்தில் அரசு வைக்கத் தவறியது ஆகியவை மக்களை பெரும் கோபத்துக்குள்ளாகியிருந்தன.

எனவே மக்கள் கட்டுப்பாட்டையும் மீறி நடந்து கொள்ள முற்பட்டனர். பொதுமக்கள் கற்களை அமைச்சர்களை நோக்கி ஆவேசமாக வீசஆரம்பித்தனர்.

நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே அதிரடிப்பொலிசார் உடன் அழைக்கப்பட்டு நிலைமையைக் கட்டுப்படுத்தினர்.

அதிரடிப் பொலிஸார் கனத்தை பொதுமயானத்தைச் சுற்றி பாதுகாப்புவலயம் அமைத்து பொதுமக்களை மயானத்துக்குள் செல்லாதவாறு தடுத்தனர். (இ)

தமிழீழ

[1-ம பக்கத் தொடர்ச்சி]

வாறான பிணக்குகள் யாவும் காவல் துறையினரால் தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இம்மன்றுகளினால் வழங்கப்பட்ட தீர்ப்புகள் யாவும் காவல்துறையினரால் நடைமுறைப்படுத்தப்படும். வெகுவிரைவில் இச்செயற்பாடுகள் யாவும் தமிழீழ காவல் துறையினரால் ஆரம்பிக்கப்படும். இக்கால இடைவெளிக்குள் இம்மன்றுகளினால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள தீர்ப்புகளை உதாசீனம் செய்யும் வகையில் யாராவது செயற்பட்டால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன் என்று சாவல்துறை பொறுப்பாளர் பா. நடேசன் தெரிவித்துள்ளார். (ரி)

21 பேர் பலி

(சண்டிகார்)

பஞ்சாப்பில் தீவிரவாதிகளின் தாக்குதலில் நேற்று மாத்திரம் 21 பேர் பலியாகியுள்ளனர்.

இதேவேளையில் பீகாரில் நேற்று 6 மாடிக்கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்ததில் 3பேர் உயிருடன் மண்ணுள் புதையுண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [க]

மரண அறிவித்தல்

திரு. முத்து கந்தையா

சரம்பன் கிழக்கை சேர்ந்தவரும் தற்சமயம் 38ம் இலக்கம் கண்டிவீதி யாழ்ப்பாணத்தில வசிக்கும் முத்து கந்தையா 10-8-92 இறைவனடி எய்தினார் அன்னார் இராசமணி. இராசசிங்கததின அன்பு சகோதரரும் நீலாம்பிகையின் அன்பு கணவரும், இந்திரா சிவகடாட்சம், ஜெகநாதன், ஜயரெத்தினம் (கொழும்பு), சந்திரா இராசேந்திரா, அரியரெட்டனம் [லண்டன்), ஈஸ்வரநாதன் (ஜோமனி], கோபிநாதன் [அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு தகப்பனாரும் சிவகடாட்சம் (சிவகடாட்சம் & Co பக்மாவதி முத்துமலர், இராசேந்திரா (Commercial Supdt Telecommunication) மரியன், கௌசல்யாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜசிந்திரா [சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) மாணவியின் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் (11-8 92) இன்று செவ்வாய்க்கிழமை மாலை 2 மணியளவில் நடைபெற்று துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி இராஜேந்திரா
(மகள்)

38, கண்டி வீதி
யாழ்ப்பாணம்.
(சி-6662)

திரு. செல்லத்துரை தேவராசா

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மூளாய் ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான திரு. செல்லத்துரை தேவராசா (S M. S) அவர்கள் 1992-08-09 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் புஷ்பதேவியின் அன்புக் கணவரும், புஷ்பராஜா (ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்), ஜீவராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தசாமி (நியூ புவனேஸ்வரி மெடிக்கல், யாழ்ப்பாணம்), பாலசிங்கம் (ஸ்ரீ முருகன் மெடிக்கல், நெல்லியடி), கிருஷ்ணசாமி (ஸ்ரீ முருகன் மெடிக்கல், பருத்தித்துறை), விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆறுமுகம் செல்லம்மாவின் அன்பு மருமகனும், தவமணிதேவி, சற்குணதேவி, கமலாதேவி, பத்மாதேவி, கிருபைநாதன் (டோகா) ஆகியோரின் மைத்துனரும், ராஜேந்திரனின் (சுவிஸ்) அன்புச் சித்தப்பாவும் ஆவர்.

அன்னாரின் ஈமக் கிரியைகள், 1992-08-09 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5-30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தொல்புரம் மத்தியிலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, மூளாய் பித்தனை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் மத்தி,
சுழிபுரம்.

தகவல்: தே. புஷ்பராஜா
(சி 6658)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கிவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/8

காட்டின் மரம் உயர
நாட்டின் கரம் உயரும்